**மாதிரி வினாத்தாள்**

நோய்த்தடைக்காப்பு மண்டலம் - பகுதி I

10th Standard

**அறிவியல்**

Reg.No. :

II.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.
III.வினா எண்15- ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 01:00:00 Hrs | Total Marks : 45

## பகுதி - அ

5 x 1 = 5

1) பின்வருவனவற்றுள் விரும்பத்தக்க உடல் நலக்கூறு ..............................

(a) திரு X தொற்றுநோயிலிருந்து குணமடைகிறார். (b) திரு Y நாள்தோறும் இன்சுலின் ஊசி போட்டுக்கொள்கிறார்.

(c) திரு Z மிகவும் மன அழுத்தத்தில் உள்ளார். (d) திரு K நாள்தோறும் தன் கடமையினைச் செய்கிறார்,மகிழ்ச்சியாக உள்ளார்.

2) சமூகத்தில் சுமூகமற்ற செயல்..................

(a) ஒருவர், பிறந்தநாள் விழாவில் மகிழ்ச்சியுடன் பங்கேற்கிறார். (b) எளிய செயல்களிலும் கடுமையாக நடந்து கொள்கிறார்.

(c) சூழ்நிலைகளுக்கு ஒப்பச்செயல்படுகிறார். (d) தன் உடல்நலமற்ற தாயை மருத்துவமனையில் சென்று கவனித்துக் கொள்கிறார்.

3) பின்வருவனவற்றுள் பாக்டீரியாவால் உண்டாகும் நோய்.................

(a) மூளைக்காய்ச்சல் (b) வெறிநாய்க்கடி (c) இரணஜன்னி (d) பெரியம்மை

4) பின்வருவனவற்றுள் காற்றின்மூலம் பரவும் நோய் ..........................

(a) காசநோய் (b) மூளைக்காய்ச்சல் (c) டைபாய்டு (d) காலரா

5) மிகக் கடுமையான மலேரியாக் காய்ச்சலை உருவாக்கும் பிளாஸ்மோடியம் கிருமி ................................

(a) ஒவேலே (b) மலேரியே (c) பால்சிபாரம் (d) வைவாக்ஸ்

## பகுதி - ஆ

2 x 1 = 2

6) ஒரு சிறந்த நல வாழக்கையை வாழ, ஒவ்வொரு மனிதனும் நல்ல, மனம், சமூக நலத்துடன் இருத்தல் வேண்டும். இதில் ஏதேனும் ஒன்று குறைவுபட்டாலும் அவர் -----------------எனப்படுவார். ஆரோக்கியமற்றவர் /நோயாளி

7) கவிதாவுக்கு சாதாரணச் சளி, கவிதாவிடம் நீ என்னென்ன கேள்விகள் கேட்டு இந்நோய் உள்ளதை உறுதிச் செய்வாய். (அ) ................ (ஆ) ....................

## பகுதி - இ

5 x 2 = 10

8) மராஸ்மஸ் மற்றும் குவாஷியோர்கர் நோய்கள் புரதக் குறைபாட்டால் ஏற்படுகின்றன. மராஸ்மஸ் நோய், குவாஷியோர்கர் நோயிலிருந்து உப்பிய வயிறு மற்றும் முகத்தில் வீக்கம் ஆகிய அறிகுறிகள் மூலம் வேறுபடுகின்றன. இக்கூற்று சரியா ? தவறாக இருப்பின் திருத்தி எழுதுக.

9) கொடுக்கப்பட்டுள்ள உடற்குறைபாடுகளில் தனியான ஒன்றைத் தகுந்த காரணங்களுடன் கண்டறிந்து எழுதுக.(தாலசிமியா, ஹீமோபிலியா,மாலைக்கண், அல்பினிசம், கதிர் அரிவாள் இரத்த சோகை )

10) சாதாரண சளியால் பாதிக்கப்பட்ட நபரிடம் காணப்படும் பொதுவான அறிகுறிகள் யாவை?

11) நிறக்குருடு நோயிலிருந்து மாலைக்கண் நோயை வேறுபடுத்துக.

12) பள்ளி விடுதியில் தங்கியுள்ள ஒரு மாணவனின் தோலில் அரிப்புடன் கூடிய அடர்ந்த தடிப்பு காணப்பட்டது. இதை அறிந்த விடுதிக் காப்பாளர் மற்ற மாணவர்களைப் பாதிக்கப்பட்ட மாணவரின் துவாலை, ஆடை, சீப்பு ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது என அறிவுறுத்துகிறார்.அந்த மாணவருக்கு ஏற்பட்டுள்ள நோயின் பெயர், அந்த நோய்க்கான காரணிகளைக் கண்டறிக.

## பகுதி - ஈ

4 x 5 = 20

13) கலா என்பவர் குழந்தை பெற்றுள்ளார். அ) பிறந்த குழந்தைக்கு முதல் ஆறு மாதங்களுக்குள் வழங்க வேண்டிய நோய்த்தடுப்பூசி அட்டவணையை எழுதுக ஆ) இத்தடுப்பூசிகள் மூலம் எந்தெந்த நோய்களைத் தடுத்திட இயலும்?

14) உங்க பகுதியில் மலேரியா பரவி உள்ளது அ) இதனைக் கட்டுப்படுத்த உங்கள் பகுதியின் உரிய அலுவலர்களுக்குத் தகுந்த ஆலோசனை வழங்குக. ஆ) மலேரியாவின் சரியான நோய் அறிகுறியினை தேர்ந்தெடுத்து எழுதுக. (குளிர், நடுக்கம் மற்றும் கடுங்காய்ச்சல், பேதி)

15) a) அக்டோபர் 15, கை கழுவிடும் நாளாகக் கொண்டாடப்படுகிறது. அ) உங்கள் நண்பனுக்குக் கை கழுவுதலின் நன்மைகளைக் கூறுக. ஆ) ஒருநாளில் எந்தெந்த நேரங்களில் கை கழுவுவீர்கள்?

**(OR)**

b) நோய்த்தடுப்பாற்றல் என்றால் என்ன? நோய்தடுப்பாற்றலின் வகைகளைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

*******************************************